## செய்தி வெளியீடு

**செ.வெ. எண். 24** **நாள். 19.12.2017**

**சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் தேர்தல் விளம்பரங்கள் குறித்து கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் அறிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 21.12.2017 அன்று தேர்தல் நடைபெறுவதையொட்டி தேர்தல் நன்னடத்தை விதிகளின்படி, சமூக வலைத்தளங்களில் ஆர்.கே.நகர் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கட்சி அல்லது வேட்பாளர்களுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ விளம்பரம் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவின் அனுமதியில்லாமலும், தன்னிச்சையாகவும் வெளியிடப்படும் வலைத்தள விளம்பரங்கள் கண்டறிந்து உரிய விசாரணை மேற்கொண்டு, வேட்பாளர்களின் தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்கப்படும்.

யாதொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எஃப் எம்., ரேடியோ, வாட்ஸ் ஆப், முகநூல், டிவிட்டர் போன்ற அல்லது இதுபோன்ற சாதனம் வாயிலாக பொதுமக்களின் பார்வைக்கு வைக்கக்கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

மேலும், வாக்காளர்களின் கைபேசி எண்ணிற்கு ஒரு வேட்பாளருக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ குறுஞ்செய்தி அனுப்பி அச்செய்தியை பலருக்கு அனுப்பினால், அனுப்புபவருக்கு பணப்பலன் மற்றும் பிற வகை பலன்கள் கிடைக்கும் என்பது போன்று அனுப்பப்படும் குறுஞ்செய்திகளின் உண்மைத் தன்மை கண்டறிந்து, அதன் உண்மையான நோக்கம் குறித்து விசாரணை மேற்கொண்டு 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126(2)ன்படி, இரண்டு ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் அறிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**